1990 மே 10]

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) விஜய அச்சம்பாடு ஊராட்சி ஒன்றியத்தைச்சார்ந்த இட்டமொழி கிராமத்திலும் ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு ஆணையிட்டுள்ளது,

அவசர தீவிர சிகிச்சைப் பகுதி.

*6200 திரு. சி. கோவிந்தராஜன் :
மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

மாவட்ட வட்ட மருத்துவமனைகளில் அவசர தீவிர சிகிச்சைப் பகுதி (Intensive Medical Care Unit) அமைக்கும் திட்டம் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா?

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி: பேரவைத் தலைவர் அவர்களே.

இல்லை.

திரு. சி. கோவிந்தராஜன் : தலைவர் அவர்களே, இந்த தீவிர சிகிச்சை குறைந்தபட்சம் மாவட்ட தலைநகரங்களில் இருக்கக்கூடிய மருத்துவமனைகளில் கூட இல்லை என்று சொன்னால் அங்கு ஏராளமான மக்கள் சென்னையை நோக்கி வரவேண்டிய சூழ்நிலை இருக்கிறது அல்லது வேறு எங்கேயோ பெரிய மருத்துவ மனையை நோக்கிச் செல்ல வேண்டிய நிலைமை இருக்கிறது. பல்வேறு திட்டங்களை மக்களுடைய நல்வாழ்வுக்காக கொண்டு வரக்கூடிய நிலைமையில் இருக்கக்கூடிய இந்த அரசு இந்த மாவட்ட மருத்துவமனைகளில் இப்படிப்பட்ட தீவிர சிகிச்சைப் பகுதியைத் துவக்குவதற்கு அதற்கான மருத்துவர்களைப் போட்டு பயிற்சியும் கொடுப்பதற்கு வேண்டிய ஏற்பாட்டை அரசு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : பேரவைத் தலைவர் அவர்களே, தீவிர மருத்துவ சிகிச்சைப் பிரிவு மாவட்ட அளவிலும், வட்ட அளவிலும் உருவாக்க வேண்டும் என்று சொன்னால் அதற்கான நிதி ஆதாரம் இப்போது அரசிடம் இல்லை. மேலும் மாவட்டங்களில் இப்போது தீவிர இருதய சிகிச்சைப் பிரிவு துவக்கப்பட வேண்டும் என்ற எண்ணத்தோடு 15 மாவட்ட மருத்துவமனைகளில் இப்போது அது துவக்கப்படுகின்ற

பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. மேலும் உள்ள 5 மாவட்ட தலைமை மருத்துவமனைகளிலும் துவக்கப்படுவதற்கான திட்டம் செயற் குறிப்பு அரசிடம் இருக்கிறது. ஆகவே இன்டென்சிவ் கேர் யூனிட் என்று சொல்லப்படுகிற இவைகளைத் துவக்கி விட்டாலே பெரும்பாலான பகுதிகளில் இதுபோன்ற தீவிர சிகிச்சைப் பிரிவுகளும் பணியில் அமர்த்தப்படும் என்றும் தெரிவித்துக்கொள்கிறேன். உறுப்பினருடைய கருத்து அரசினுடைய நிதி நிலைக்கேற்ப அவ்வப்போது படிப்படியாக ஏற்றுக்கொள்ளப்படும்.

திரு. சி. கோவிந்தராஜன் : தலைவர் அவர்களே, இது இருதய சிகிச்சைப் பிரிவு என்பது ஒன்று. இன்டென்சிவ் கரானரிகேர். இன்னொன்று இன்டென்சிவ் மெடிக்கல் கேர். உதாரணமாக கிராமப் பகுதியில் இருக்கக்கூடியவர்கள் பாலிடால் போன்ற விஷத்தை அருந்திவிட்டு அல்லது பாம்புக் கடியினால் விஷத்தினால் பாதிக்கப்பட்டு வருபவர்களுக்கு அவசரச் சிகிச்சை அவசியமாகிறது. இப்படிப்பட்ட நிலைமைகள் அப்படிப்பட்ட கிராமப் புறத்தில் நடக்கக்கூடிய நிலைமை இருப்பதால் இதற்காக தனிப் பிரிவு ஒன்று அமைப்பதற்கு அரசு முன்வருமா? இன்டென்சிவ் மெடிக்கல் கேர்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : தலைவர் அவர்களே, நானும் அதைத்தான் சொன்னேன். இன்டென்சிவ் மெடிக்கல் கேர் யூனிட் என்று இருப்பதற்குப் பதிலாகத்தான் இப்போது ஐ.சி.சி இன்டென்சிவ் கார்டியாலஜிலே அதை உருவாக்குவதற்கு மாவட்ட மருத்துவ மனைகளுக்கு அனுமதி வழங்கி இருக்கிறார் என்று குறிப்பிட்டேன். அவசர சிகிச்சைப் பிரிவு என்ற எமர்ஜென்சி என்று சொல்லப்படுகின்ற பிரிவுகள் பல்வேறு மருத்துவமனைகளிலே இருக்கின்றன. அவைகளிலேயே நீங்கள் குறிப்பிட்ட வியாதிகளுக்கான சிகிச்சைகள் எல்லாம் அளிக்கப்படுகின்ற காரணத்தினால் இன்டென்சிவ் மெடிக்கல் கேர் யூனிட் என்பது இப்போது நிதிநிலைக்கேற்ப அமைக்க முடியாத ஒரு சூழ்நிலையில் அரசு இருக்கிறது.

9-55 மணி

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

பெரியகுளம் அரசு மருத்துவமனை.

* 6256 திரு. எல். மூக்கையா:
மாண்புமிகு மக்கள் நால்வாழ்வுத்துறை அமைச்சர்; கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பரா;

(அ) பெரியகுளம் அரசு மருத்துவமனை, மாவட்ட அரசு மருத்துவமனையாக மாற்றியமைக்கப்பட்டும், மாவட்ட மருத்துவ மனைக்குரிய வசதிகள் அங்கு இல்லை என்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது வசதிகள் செய்து தரப்படும்